Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Monthly
DOI: 10.63300/tm12052026.27
Vol. 12, No. 05 (2026) 12 05 2026 314–324 TIRJTS-2026-0009

RESEARCH ARTICLE

நெய்தல்திணைப் பாடல்களில் குறிப்புப்பொருள்

Implied Meaning in Neithal Landscape poems

Dr. P Nathiya[1,*]
[1]Assistant Professor, Department of Tamil, Urumu Dhanalakshmi College, Trichy-19.
***Corresponding author:** P Nathiya, mailmenathiya@gmail.com
ORCID iD: P Nathiya https://orcid.org/0000-0001-5836-0365

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
TIRJTS-2026-0009

Peer review
Double-blind peer review

Keywords
Foster-Mother's Friend
Hero
Heroine
Hero's Love
Fidelity
Marriage Delay
Bold Decisions
Doubt and Clarity
Heroine's Ignorance
Unfaithful Conduct
Affliction of Pining (Pasalai)
Greatness of the Country
Virtuous Character Traits

ABSTRACT

This chapter analyzes the implied meaning (Kurippuporul) found in the songs of the Neythal Thinai (coastal landscape/genre). Those structured as the foster-mother's friend speaking explain the hero's love for the heroine, the fact that he will not pursue other women, and that he will marry her. It also explains the bold decisions, doubts, and clarity of the heroine when marriage is delayed, along with details regarding the speaker, the listener, and the subject matter. The research chapter is structured to explain the heroine's ignorance, the hero's unfaithful conduct, the heroine's affliction of pining (pasalai), the greatness of the hero's country, and the virtuous character traits of the heroine.

How to cite this article: P Nathiya (2026). நெய்தல்திணைப் பாடல்களில் குறிப்புப்பொருள். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(05), 314–324. https://doi.org/10.63300/tm12052026.27
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முன்னுரை

ஐங்குறுநூற்றில் உள்ள நெய்தல் திணைப் பாடல்களில் கூறும் கருத்துக்களை வெளிப்படுத்த அமைந்த குறிப்புப் பொருள்களை ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

நெய்தல்பாடல்கள்

ஐங்குறுநூற்றில் நெய்தல் திணைப் பாடல்கள் இரண்டாவதாக அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் 'அம்மூவனார்' ஆவார். பத்துத் தலைப்புகளில் ஒவ்வொரு தலைப்பிற்கும் பத்துப் பாடல்களாக மொத்தம் நூறு பாடல்கள் உள்ளன. பத்துத் தலைப்புகளும் வருமாறு.

1. தாய்க்குஉரைத்தபத்து
2. தோழிக்குஉரைத்தபத்து
3. கிழவற்குஉரைத்தபத்து
4. பாணற்குஉரைத்தபத்து
5. ஞாழற்பத்து
6. வெள்ளாங்குருகுப்பத்து
7. சிறுவெண்காக்கைப்பத்து
8. தொண்டிப்பத்து
9. நெய்தற்பத்து
10. வளைப்பத்து

தாய்க்குஉரைத்தபத்து

தனது தாயாகிய செவிலிக்குத் தோழி கூறிய பத்துப் பாடல்கள் 'தூய்க்கு உரைத்த பத்து' ஆகும். செவிலி தோழி ஆகிய இருவரும் தாய். மகள் என்பதைத் தொல்காப்பியம்.

ஆய்பெருஞ்சிறப்பின்அருமறைகிளத்தலின்

தாயெனப்படுவோன்செவிலியாகும் "

தோழிதானேசெவிலியதுமகளே"

என இருநூற்பாவின் வாயிலாக அறியலாம். தலைவியின் காதலைத் தோழி தனது தாய்க்குக் கூறுவதாக இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

தலைவனின்வருகை

சங்க காலத்தில் களவு மணம், கற்பு மணம் என இரண்டு வகையான மணமுறை நிலவின. தொடக்கத்தில் களவு மணமே மக்களிடம் இயல்பாகத் தோன்றியது. பின்னர் சொத்துடைமைச் சமுதாய வளர்ச்சியில் களவு மணம் புறந்தள்ளப்பட்டு, கற்பு மணம் உயர்வாகப் போற்றப்பட்டது. இது குறித்து சிலம்பு நா.செல்வராசு அவர்கள்,

“**களவுமணம்அல்லதுகளவுவாழ்க்கைஎன்பதுதமிழகத்தில்தொல்சமூகஅமைப்பின்வெளிப்பாடுஆகும்.இதுசுதந்திரமான**

காதல் உறவை, தலைவனைத் தலைவியே தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தது. தந்தை வழிச் சமூகம் தோன்றியபோது. களவு மணம் பெற்றோர் இசைவு மணமாக உருப்பெற்றது. இதுவே கற்பு மணம் என்ற குறியீட்டைப் பெற்றது. கற்பு வாழ்க்கைச் சமூக அமைப்பில் களவு வாழ்க்கை அறம் கருதப்பெற்றது.....” அல்லாததாகக் என விளக்குகின்றார். தாய்க்கு உரைத்த பத்து பாடல்களுள் முதலிரு பாடல்கள் களவு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவன் மணமுடிப்பதற்காகப் பொருளீட்டப்பிரிந்து, பொருளீட்டி தேரில் தலைவி ஊருக்கு வருவது குறித்து தோழி உரைப்பதாக உள்ளன.

“அன்னை வாழி! வேண்டு, அன்னை! உதுக்காண்

ஏர்கொடிப் பாசடும்பு பரிய ஊர் இழிபு

நெய்தல் மயக்கி வந்தன்று, நின்மகள்

பூப்போல் உண்கண் மரீஇய

நோய்க்கு மருந்து ஆகிய கொண்கன் தேரே

(ஐங்.நெய்.101)

என்ற பாடலில்,

“அன்னையே, நீ வாழ்க! யான் சொல்வதை விரும்பிக்கேள். நின் மகளின் பூப்போன்ற, மையுண்ட பொருந்தியுள்ள நோய்தீர்வதற்கு கண்களை இப்பொழுது மருந்தாக அமையும் கொண்கனுடைய தேர், எழுச்சியுடைய பசிய அடம்பங்கொடிகள் அறுந்து போகும் வண்ணம் ஊர்ந்தும், பின்னர்ப் பள்ளத்தே இறங்கி நெய்தற்செடிகளைச் சிதையச் செய்தும் வருகின்றது. அதனை நீ காண்பாயாக" எனக் கூறப்பட்டுள்ளது.

"அன்னை, வாழி ! வேண்டு, அன்னை ! - நம் மூர்

நீனிறப் பெருங்கடற் புள்ளினாது

துன்புறு துயரம் நீங்க,

இன்புற இசைக்கும், அவர் தேர்மணிக் குரலே”

(ஐங்.நெய். 102)

இவ்விரு பாடல்களிலும் தலைவனின் வருகையோடு அவன் வருவதற்கான அறிகுறிகளும் கூறப்பட்டுள்ளன. முதற்பாடலுக்கு,

தேர்அடும்புபரியஅதனைஊர்ந்திழிந்துநெய்தலைமயக்கிவந்ததென்றதுகளவிற் கூட்டம்வெளிப்பட்டபின்பும்வரையாதுபிரிந்தானென்றுஅலர்கூறுவார்வருந்தவ ந்தான்"*

எனப் பழையவுரை குறிப்பிடுகிறது. ஆகவே தலைவன் மணமுடிக்க வருவதை நேரிற்காணாத ஊரார்களும் தெரிந்து அறியும் வகையில் தலைவனின் தேர் வந்து சென்றதன் அடையாளமாக, தடமாக அடம்பக் கொடிகள் அறுவதைத் தோழி கூறுகிறாள் எனலாம். இரண்டாவது கண் பாடலில் தேரில் கட்டிய மணிகளின் ஒலிப்பு கூறப்பட்டுள்ளது. இதன் வாயிலாகத் தலைவன் மறைவாக பிறர் அறியா வண்ணம் வந்து செல்லவில்லை. ஊரார் அறிய வருகிறான் என்ற கருத்து புலப்படுத்தப்படுகிறது. களவு வாழ்க்கை கொண்ட தலைவன், பொருளீட்ட பிரிந்து சென்று காலம் நீட்டித்த நிலையில் தலைவியைக் கைவிட்டான் என ஊரார் பழித் தூற்றிட அதனைப் பொய்ப்பிக்கும் வகையில் தலைவனின் வருகைக்கான அறிகுறிகளைக் கூறியிருக்கலாம். தலைவன் களவு மணம் புரியாது கற்பு மணமே செய்கிறான் என்பதைத் தெரியப்படுத்தவும் தலைவனின் வருகைக்கான அடையாளம் கூறப்பட்டிருக்கலாம். ஏனெனின் தலைவனின் வருகையை அறிய வேண்டியவர்களாகத் தலைவியோ, தலைவியின் வீட்டினரோ இல்லாது ஊராரே முதன்மைப் படுத்தப்பட்டுள்ளனர்.

தோழிக்குஉரைத்தபத்து

தலைவி, தோழிக்குக் கூறும் வகையில் அமைந்த செய்யுள்கள் தோழிக்கு உரைத்த பத்து ஆகும். இற்செறிக்கப்பட்ட நிலையில் தலைவன் தன்னை மணமுடிப்பான் என்ற நம்பிக்கை, மணமுடிக்கத் தவறுகையில் எனத் தலைவி கூறுகின்றான். பசுமையான இலைகளைக் கண்ட செருந்திமரங்கள் அடர்ந்த கரிய உப்பங்கழிக் கரைகலை உடையவன் சேர்ப்பன் எனக்கூறுவதில், அடர்ந்த மரங்கள் மறைவாகச் செய்வதற்கு ஏதுவாக உள்ளது என்பதைக் குறிக்கிறது.

அலரும்அச்சமும்

தலைவனுக்கும், தலைவிக்கும் இடையிலான உறவினை ஊரார் வாயிலாக அறிந்த என்னை தலைவியை நோக்கி, அத்தகையவனா நீ என வினவ தலைவியோ எங்களையா கூறினர் என மெல்லக் கூறுகின்றாள்.

அம்ம வாழி, தோழி! நென்னல்

ஓங்கு திரை வெண்மணல் உடைக்கும் துறைவற்கு

கூரார் பெண்டு எனமொழிய, என்னை

அது கேட்டு, அன்னா என்றன, அன்னை,

பைபய எம்மை என்றனென்யானே”

(ஐங். நெய். 113)

இப்பாடலில் 'ஓங்குதிரை' என்பது அமைதியடையாது மேலும், மேலும் இடைவிடாது எழுந்து வருதலைக் குறிக்கிறது. அது போலவே ஊராரும் தொடர்ந்து அலர் கூறுகின்றனர். வெண்மணல் என்பது மென்மைக்குக் குறியாக நின்று களவு ஒழுக்கத்தைக் குறிக்கிறது. இடைவிடாது அலரால் காதல் சிதைகிறது என்பது பொருள்.

எங்களையா என தலைவி மெல்லக் கூறியது முன்னமாக அமைந்து லைவியின் அச்சத்தைக் குறிப்பு எச்சமாக உணர்த்துகிறது.

காதலுக்கான ஊரார் நெருக்கடியைக் குறிக்கவும், அதனால் காதல் சிதைவதையும் குறித்திட உயர்ந்து வரும் அலைகள் வெண்மையான மணலைச் சிதைத்தல் எனக் குறிப்புப் பொருள் கூறப்பட்டுள்ளது.

கூடி வாழ்வதற்கு ஏற்ப தலைவன் மணமுடிக்க வேண்டும் என்பது குறிப்புப் பொருளாகும்.

கிழவற்குஉரைத்தபத்து

கிழவற்கு உரைத்த பத்து என்ற தலைப்பில் உள்ள பாடல்களைக் கூறியவர், கேட்பவர். பாடுபொருள் குறித்து பழையவுரையில்,

"பரத்தை தலைமகற்குச் சொல்லியது, பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையோடு கூடி மறைந்து ஒழுகாநின்றாளென். பதறி தலைவி புலைத்துழி, இத்தவறு என்மாட்டில்லை. நீ இப்புலவியை நீக்க வேண்டும் என்று தோழிக்குத் தலைமகன் கூறப்புலவியை நீக்கக் கருதிய தோழி அவள் இளமை கூறி நகையாடிச் சொல்லியதூஉம் குறிப்பிடுகிறது. தலைவன் தான் கூடிய செய்தியை மறைப்பதை வெளிப்படுத்தல், கூடப்பட்ட பெண் அறியாமை நிறைந்தவள் என்பன செய்யுள்களில் குறிப்புப் பொருளாகக் கூறப்பட்டுள்ளன.

வெளிப்படுத்தல்

தலைவனோடு கடலில் நீராடிய தலைவி, கல்இழைத்த ஒளியுடைய அணியினை மணல்மேட்டு தொலைந்து விட்டுப் பின்னர் தேடியிருக்கின்றாள். இதனைப் பரத்தைப் பெண் அறிந்து தலைவனிடம் கூறுகின்றாள்.

“கண்டிகும் அல்லமோ, கொண்க! நின்கேளே?

ஒள்இழை உயர்மணல் வீழ்ந் தென

வெள்ளாங் குருகை வினவு வோளே!'

(ஐங். நெய்.122)

என்ற பாடலில் தலைவி வெள்ளாங்குருகினை நோக்கி தனது அணியைக் கண்டாயோ? என வினவியதாகக் கூறப்பட்டுள்ளது. தலைவியானவள் அங்கு எதிர்ப்பட்ட பரத்தையரின் தோழியிடம் வினவி இருக்கலாம். அதனை மறைப்பதற்கு பறவையிடம் வினவியதாகக் கூறப்பட்டுள்ளது எனலாம். இங்குத் தலைவனின் மறைவொழுக்கத்தை, நிகழ்ந்த நிகழ்ச்சி கூறிந் தகவலளித்தவரை மறைப்பதற்காகக், குறியீடாகப் பறவை பயன்படுத்தப் பட்டுள்ளது எனலாம்.

பாணற்குஉரைத்தபத்து

பாணனை நோக்கி, தலைவனின் பரத்தை ஒழுக்கம் கூறி, அதனால் தனக்கு ஏற்பட்ட நலிவினை எடுத்துரைத்து பரத்தையிடம் சென்ற தலைவனைத் தன்னோடு கூட்டிவிக்குமாறு, தலைவி கூறுவதாக அமைந்த பாடல்களின் தொகுதி 'பாணற்கு உரைத்த பத்து' ஆகும். இதில் அடங்கியுள்ள பத்துப் பாடல்களுள் ஒன்பதாவது பாடல் மட்டும் தலைவனுக்கு உரைத்ததாக உள்ளது.

சாட்சியும்ஒலியும்

தலைவனின் நட்பின் இனிமையை பாணன் தலைவிக்கு எடுத்துரைக்கையில் அதனை மறுக்கும் தலைவி.

“நன்றே பாண! கொண்கனது நட்பே

தில்லை வேலி இவ்ஊர்க்

கல்லென் கௌவை எழாஅக்காலே”

(ஐங். நெய். 131)

எனக் கூறுகிறாள்.

“தில்லை மரங்களை வேலியாக உள்ள ஊரில் தலைவனது பரத்தையொழுக்கம் பற்றி மிகப்பெரிய அலர் ஒலி எழாமல் இருந்தால் தலைவனது நட்பு இனிமையாகும் என்கிறாள். ஆகவே, நட்பினை இனிமையாக்கும் பொருட்டு, தலைவன் பரத்தையொழுக்கத்தினைக் கைவிட வேண்டும் என்பது தலைவியின் உள்ளக் குறிப்பாகும். இப்பாடலில், கண்ணுக்கு மறைவினைத் தரும் தில்லை மர வேலியும், செவிக்குப் புலனாகும், அலர் ஒலியும் கூறப்பட்டுள்ளன. தில்லை மரங்களுக்கு மறைவாகத் தலைவன் காட்சிக்குப் புலனாகாதவாறு பரத்தையிடம் கூறலாம். ஆனால் செவிக்கு எட்டும் அலர் ஒலியினை மறைத்தல் முடியாது எனக் குறிப்புப் பொருள் உள்ளது. இது போன்றே அரும்புகள் மிகுந்த புன்னை மரங்கள் மலிந்துள்ள கடற்கரைச் சோலையில் தலைவனின் பரத்தை ஒழுக்கம் குறித்து அலர் எழுதியது என்கிறாள் தலைவி"

ஞாழற்பத்து

மரம் வகையைச் சேர்ந்த 'ஞாழல்' நெய்தல் நிலத்தின் கருப்பொருளாக அமைகிறது. பாடல்கள் தோறும் ஞாழல் இடம் பெறப் பாடப்பட்ட பாடல் தொகுதி 'ஞாழற்பத்து' ஆகும். தலைவன் தலைவியின் உறவினை வெளிப்படுத்துமாறு பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்கள் அனைத்தும் இயற்கையோடு இயைந்த காட்சிகளோடு பொருள் உரைக்கின்றன. இயற்கைக்கும், கருத்துப்புலப்பாட்டிற்குமான தொடர்பை மு.வரதராசன் அவர்கள்,

“மானிடரின் காதல் ஓவியங்களுக்கு மிகச்சிறந்த பின்னணியாக அமைவது இயற்கைக் காட்சி. இவ்வகையில் ஐந்து நிலத்துக் காட்சிகளையும் அழகுபடத்தீட்டியுள்ளனர். சங்ககாலப் புலவர்கள். ஆயின் அவற்றைக் காதல் நாடகத்துக்கு ஏற்ற அரங்கு என்று அளவோடு அவர்கள் நிறுத்தி விடவில்லை. தலைவன் தலைவியர் தம் உள்ளத்தே தோன்றும் கிளைப்பையும், களைப்பையும் இயற்கைக் காட்சிகளிலே கண்டோர்கள். சூழ்ந்துள்ள இயற்கையெல்லாம் அவர்களோடு ஒன்றி விட்டதாக உணர்ந்தார்கள். தலைவன் தலைவியரின் உள்ளத்து உணர்வுகளை இயற்கை உணர்ந்து இயைந்து ஒன்றிவிட்டது போல் அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் மகிழ்ந்த போது இயற்கையும் திகைத்தது. அவர்கள் துயருற்ற போது இயற்கையும் துயரால் துவண்டது என்றனர். காதலின் களிப்பைப் பெருக்கி விட்டது. அவர்களோடு ஒன்றி விட்ட இயற்கை, காதலர்கள் வாடி வருந்திய போதும் அந்த இயற்கை உடன் சேர்ந்து சோர்ந்தது. தனி இதயங்களின் துடிப்பைப் பரந்து விரிந்திருக்கும் புறவுலகம் புரிந்து கொண்டது போன்ற ஒரு வகை அனுபவம் இந்த நிலையில் ஏற்படுகின்றது. இந்த அனுபவம் கைவரும் போது இயற்கையும் மனிதனும் இரண்டறக் கலந்திடும் ஒன்றிய நிலை ஏற்படுவதைக் எனீசா எனீ சங்ககால இலக்கியங்களின் வாயிலாக எடுத்தியம்புகிறார். ஞாழற்பத்து பகுதியில் பாடு பொருள்கள் இயற்கை காட்சிகளோடு கூறப்பட்டுள்ளன.

வெள்ளாங்குருகுப்பத்து

நெய்தல் நிலக் கருப்பொருள்களுள், ஒன்றான 'வெள்ளாங்குருகு’பத்துப் பாடலிலும் இடம் பெற்றுள்ளது. அவ்வாறிருப்பினும், மற்றொரு கருப்பொருள்களுள் ஒன்றான நாரையின் செயல்களும் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. நாரையின் செயல்களே குறிப்புப் பொருள்களாக இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலிலும் நாரையின் செயல்கள் வெவ்வேறானதாக அமைகின்றன. அவைகளுக்கு ஏற்ப தலைவனின் செயல்களும் மாறுபட்ட பொருளைத் தருகின்றன. 'மெய்ப்பாடு' எட்டு எனக் கூறும் தொல்காப்பியர். ஒவ்வொரு மெய்ப்பாடும் நான்கு முறையில் தோன்றுமென்பார். அவ்வகையில் முதல் மெய்ப்பாடான நகை

“எள்ளல் இளமை பேதைமை மடனென்று

உள்ளப் பட்ட நகைநான் கென்ப்”

என்பார். அவற்றுள் எள்ளல் என்பதற்குப் பேராசிரியர்.

“எள்ளலென்பது தான் பிறரை எள்ளிநகுதலும் பிறரால்

எள்ளப்பட்ட வழித் தான் நகுதலுமென இரண்டாம்....."

என விளக்கம் கொடுப்பார்.

வெள்ளாங்குருகின் குஞ்சு சிறந்ததெனக் கொண்டு, நாரையானது காணச் சென்ற பொருளில்,

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென

காணிய சென்ற மடநடை நாரை”

என்ற செய்தி பத்துப் பாடல்களிலும் கூறப்பட்டு, அவ்வாறு சென்ற நாரையின் செயல்களால் விளைந்த நிகழ்வு உள்ளுறையாகப் பாடல் பொருளை விளக்குகின்றன. இதில் நாரை சென்றதற்கான காரணம் பொய் ஆகும். பொய்யின் அடிப்படையில் நாரையின் செயல் எள்ளலுக்கு உள்ளாகின்றது.

<u>நாரைதவறுதலாகச்செய்தசெயலினையும்,அதனைக்கொண்டுகூறும்குறிப்புப் பொருள்களும்வருமாறு</u>

பாடல்எண்	**உள்ளுறை**	**வெளிப்படைப் பொருள்**	**குறிப்புப்பொருள்**
151	நாரை மிதித்ததால் கண்போன்ற நெய்தல் மலர் மலர்ந்து இடைவிடாது தேன் போன்று மணம் கமழ்கிறது.	தலைவனின் பரத்தைப் பிரிவில் மனம் உடைந்த தலைவி அவனுக்கு வாயில் உடன் பட மறுத்தல்.	நெய்தல் மலர் இயல்பாக மலர வில்லை. அது போல் தலைவனது அன்பும் உண்மையானது அல்ல.
152	கையறு நிலையில் நாரை இரற்றிப் புலம்பல்.	தலைவன் ஒரு பரத்தையைத் தனக்கு இற்பரத்தையாக வரைந்து கொள்வான். அதுவே அவனது அறநெறிகளும் அருள் பண்புமாகும்.	துயரில் நாரை புலம்பி ஆறுதல் தேடுகிறது. தலைவன் காமத்துயர் நீங்க பரத்தையரை நாடுகிறான்
பாடல்எண்	**உள்ளுறை**	**வெளிப்படைப் பொருள்**	**குறிப்புப்பொருள்**

153	நாரை தன் அலகினால் கோதியதால் உதிர்ந்த இறகுகளை மக்கள் பெறுகின்றனர்.	நீண்ட கூந்தலுடைய தோழி தலைவனின் நட்புறவை விரும்ப மாட்டாள்.	பரத்தையொழுக் கம் தலைவன் கொள்ளான் (உதிர்ந்த இறகு பெறுதல் பரத்தை யொழுக்க இழிவு குறியீடாகும்)
154	நாரை கடற்கரைச் சோலையில் தங்குகிறது.	தலைவனிடம், தலைவியால் எதுவும் செய்ய இயலாது ஊரார் பொய் கூறுகின்றனர்.	தலைவன் பரத்தை வீட்டில் தங்குகிறான். அதனை ஊரார் மறைக்கின்றனர்.
155	நாரை பதைத்ததால் சிதைவுற்ற நெய்தல் வெள்ளத்தில் செல்லும்.	களவு ஒழுக்கக்காலத் திலேயே பைஞ்சாய்க் கோரையிலான மகன் பாவையர் தலைவி பெற்றுள்ளாள்.	நெய்தல் மலர் /வீணாகச் செல்கிறது குழந்தைப் பேறின்றி தலைவியும் வீணாகக் கழிக்கின்றாள்.

தொண்டிப்பத்து

சேர நாட்டின் தலை நகரம் 'தொண்டி' ஆகும். தொண்டி நகரம் இடம் பெறுமாறு பத்துப் பாடல்களும் பாடப் பட்டுள்ளன. அவற்றுள் ஒன்பது பாடல்களில் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. பத்தாவது பாடல் உள்ளுறையாக அமைக்கப்பட்டு குறிப்புப் பொருளில் இடம் பெற்றுள்ளது. 2

-"சிறுநணி வரைந்தனை கொண்மோ - பெருநீர்

வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்

பறைத்பு முதுகுருகு இருக்கும்

துறைகெழு தொண்டி அன்ன இவள் நலனே"

-(ஐங்.நெல்.180)

என்றப் பாடலில் களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவனை விரைந்து மணமுடிக்குமாறு தோழி வற்புறுத்துகிறாள். இப்பாடலில் அமைந்த உள்ளுறை,

வலைவர் வலைவீசிக் கொணர்ந்த கொழுமீனாகிய உணவைத் ஒன்பதற்கும் பறப்பதற்கும் வலிமையில்லாத கிழக்கொக்குத் தந்த வேளை பார்த்திருப்பது போல, என் தோழியை மகட்பேசிக் கொள்ள ஏதிலார் பலர் வந்து காத்திருக்கின்றனர்.

பிறர் மணந்து செல்வதற்கு முன்னர் தலைவன் மணந்து செல்லுமாறு தோழி வற்புறுத்துகிறாள். ஆகவே தலைவி உடன் போக்கிற்கு உடன்படாள் என்பது குறிப்புப் பொருளாகும்.

நெய்தற்பத்து

நெய்தல் நிலத்துக் கருப்பொருள்களுள் ஒன்றான ' நெய்தல்' இடம் பெறும்படி பத்துப் பாடல்களைக் கொண்டது 'நெய்தற் பத்து' ஆகும். தலைவி வாழ்தலுக்குரிய இனிய ஊரின் தன்மை. தலைவனது நட்பின் பெருமை. தலைவியின் தாயின் அறிவுரை, இல்லற மாண்பு, தலைவியின் கண் அழகு பெற்றமை, தலைவனின் பண்பு நலன் ஆகியன குறிப்புப்பொருளில் கூறப்பட்டுள்ளன.

வாழ்தலுக்கு இனிய ஊர்

பெண்கள் மகிழ்ச்சியாக வாழக்கூடிய ஊரே ஒரு பெண் மணமாகி வாழ்தலுக்குரிய இனிய ஊர் எனத் தலைவி தோழிக்குக் கூறுகிறாள்.

“நெய்தல் உண்கண் நேர்இறைப் பனைத்தோள் பொய்தல் ஆடிய

பொய்யா மகளிர் குப்பை வெண்மணல் குரவை நிறூஉம்

துறைகெழு கொண்கன் நல்கின்

உறைவு இனிது அம்ம! - இவ்வழுங்கல் ஊரே"

(ஐங். நெய். 181)

என்னும் பாடலில் தலைவி.

நெய்தல் மலர் "தோழியே! யான் கூறுவதைக் கேள். போன்றமையுண்ட கண்களும், நுண்ணிய சிறை பொருந்திய வளையல் அணிந்த பருந்த தோள்களும் உடையராய்ப் பொய்தல் ஆடிய பொய்யறியாத இளமகளிர், குவிந்த வெண்மணலில் குரவைக் கூத்து நிகழ்த்தி மகிழ்வதற்கு இடனான கடல்கெழு நாட்டின் தலைவன் நம்பால் அருள் உடையன் எனில், ஆரவாரம் மிக்க இவ்வூர் நமக்கு வாழ்வதற்கு இனிமையுடையதாகும்" 19 எனக் கூறுகிறாள். மேற்கண்ட பாடலில் பொய்தல் ஆகிய மணல் வீடு கட்டி விளையாடும் மகளிர் தங்களது காதலனின் சூள் பொய்க்காது என நம்பிக்கை கொண்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் காதலனால் எவ்வகைத் துயரும் அடையாத நிலையில் மகிழ்ச்சியாகப் பாடியும் ஆடியும் உள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிர் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமெனில் ஒருவனுக்கு ஒருத்தியாக காதலன் வாழ வேண்டும் என்பது குறிப்புப் பொருளாகும்.

நற்பண்புமிக்க கருணை காதலித்திருக்கிறாள் என்பது பொருளாகும். கொண்ட தலைவனைத் தலைவி

வளைப்பத்து

நெய்தல் நிலக் கருப்பொருள்களுள் ஒன்றான 'சங்கினை' அறுத்துச் செய்யப்படும் வளையல் பாடல் தோறும் இடம் பெறும் படிப் பாடப்பட்ட பத்துப் பாடல்களைக் கொண்டது 'வளைப் பத்து ஆகும். தலைவனும் தலைவியும் பிரிந்திராது சேர்ந்திருக்க வேண்டும். பிரியக்கூடாது. பொருள்வயிற் பிரிந்த தலைவனின் துயரம் வரை நீட்டிக்காது தலைவன் மணமுடிக்க வேண்டும் என்பன குறிப்புப்பொருளாகப் பாடப்பட்டுள்ளன.

மெலிவும்பொழிவும்

தலைவனைப் பிரிந்ததால் மெலிவடைந்த தலைவி, பின்னர் தலைவன் வந்தமையால் மெலிவு நீங்கப்பெற்றாள். இதனை, “கோடு புலம்கொட்ப கடல் எழுந்து முழங்கப் பாடு இமிழ்ப்பனித்துறை ஓடுகலம் உகைக்கும் துறைவன் பிரிந்தென, நெகிழ்ந்தன வீங்கின மாதோ - தோழி! என் வளையே!"

(ஐங். நெய்.192)

எனத் தலைவி தோழிக்குக் கூறுகிறாள். இப்பாடலில், கடலில் அலைகள் எழுந்து ஆராவாரம் செய்கின்றன. அதனால் கடலில் வாழும் சங்குகள் கடலை விட்டு நீங்கி கரையில் உலாவுகின்றன. அவ்வாறு கடலில் வாழும் சங்குகளே அஞ்ச, பரதவர்களோ அஞ்சாது கடலில் கலம் செலுத்துகின்றனர்.

பரதவர்களைப் போன்று தலைவியின் சுற்றத்தாருக்கு அஞ்சாது தலைவன்,தலைவியைக் காண வந்துள்ளான் என்பது குறிப்புப் பொருளாகும்.

சான்றெண்கள்விளக்கம்

References

[1]. சிலம்பு நா.செல்வராசு, சங்க இலக்கிய மறு வாசிப்பு, ப. 71

[2]. அ. தட்சிணாமூர்த்தி, ஐங்குறுநூறு மூலமும் உரையும், புத்தகம் -1 ப. 233.

[3]. மேலது,ப. 225.

[4]. உ.வே.சாமிநாதையர், ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும். ப. 49.

[5]. ச.அகத்தியலிங்கம், சங்க இலக்கியம் செவ்வியல் பார்வை. ப. 55-56.

[6]. உ.வே.சாமிநாதையர்,மு.கு.நூ.,ப. 50. 6.

[7]. பொ.வே.சோமசுந்தரனார். ஐங்குறுநூறு, ப. 177. 7.

[8]. உ.வே.சாமிநாதையர், மு.கு.நூ., ப. 57. 8.

[9]. தட்சிணாமூர்த்தி, மு.கு.நூ., ப. 79. 9.

[10]. ஐங். நெய். 132.

[11]. ஐங்.நெய்.133.

[12]. தட்சிணாமூர்த்தி, மு.கு.நூ.,ப.289. 12.

[13]. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப. 536.

[14]. அ. தட்சிணாமூர்த்தி, மு.கு.நூ.,ப. 298.

[15]. க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், உரைவளம், ப

[16]. 18. அ. தட்சிணாமூர்த்தி, மு.கு.நூ., ப. 374.

[17]. மேலது, ப. 380.

[18]. பொ.வே.சோமசுந்தரனார், மு.கு.நூ., ப. 272.

[19]. மேலது, ப. 274

[20]. மேலது,283-284.

[21]. அ. தட்சிணாமூர்த்தி, மு.கு.நூ., ப. 417.